## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!




# ஈரானில் சிக்கித் தவிக்கும் 700 தமிழக மீனவர்களை உடனடியாக மீட்க நடவடிக்கை மேற்கொள்வீர்!

## வைகோ அறிக்கை!



சென்னை, மார்ச். 22–

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

குமரி மாவட்டம் கடியப்பட்டணம், குளச்சல், இணையம் மற்றும் முட்டம் உட்பட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 60 மீனவர்கள் ஈரானில் பணியாற்றி வருகின்றனர்.

மேலும் தூத்துக்குடி, நெல்லை, ராமநாதபுரம், கடலூர் மாவட்டங்களைச் சேர்ந்த 600க்கும் மேற்பட்டோர் ஈரானில் பணிபுரிகின்றனர். இவர்கள் அனைவரும் அச்சத்தில் உள்ளனர்.

குமரி மாவட்டம் கடியப்பட்டணத்தைச் சேர்ந்த பாபின் செசாரியோ, சத்ய ரமான் ராஜ் ஆகியோர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில் ”சகோதரர்கள் அஸ்வின் ரஞ்சித் குமார், சகாய ஜெனிஷ்ராஜ் ஆகியோர் ஈரான் மீன்பிடி நிறுவனத்துக்கு கடந்த ஆண்டு செப்டம்பரில் பணிக்குச் சென்றனர்.

தற்போது அமெரிக்கா, இஸ்ரேல் நாடுகள் ஈரான் நாட்டின் மீது போர் தொடுத்துள்ளதால் ஈரானில் எங்கள் சகோதரர்கள் பாதுகாப்பற்ற சூழலில் தவிக்கின்றனர். குண்டு மழை பொழிவதாகவும், உணவுகூட கிடைக்காமல் தவிப்பதாகவும் தெரிவித்தனர்.

ஈரான் நாட்டில் தவிக்கும் தமிழக மீனவர்களை பாதுகாப்பாக அழைத்துவர உத்தரவிட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தனர்.

இந்த மனு மார்ச் 11ஆம் தேதி நீதியரசர் பரத சக்கரவர்த்தி முன்பு விசாரணைக்கு வந்த போது, அரசுத் தரப்பில், ஈரானில் உள்ள இந்தியர்களை மீட்க இந்திய தூதரகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. தூதரகத்தை தொடர்பு கொள்வதற்காக தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தியர்களை மீட்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்பட்டது.


ஆனால் இதுவரையில் ஒன்றிய அரசு அவர்களை மீட்க உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

ஈரான் அமெரிக்க மற்றும் இஸ்ரேல் இடையிலான உக்கிரமான போர் பகுதியில் சிக்கித் தவிக்கும் 700க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் மீன்பிடி விசைப்படகுகளில் கடந்த மூன்று வார காலமாக முடங்கியுள்ளனர்.

இது தொடர்பாக மீனவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதள காணொளியில், எந்த நேரத்தில் உயிர் பறி போகுமோ என்று குண்டு வீச்சுக்கு இடையில், உணவு தண்ணீர் இன்றி விசைப்படகுகளில் தங்கி உள்ளோம் என்று அச்சத்துடன் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே ஒன்றிய அரசு தமிழ்நாடு மீனவர்களை மீட்பதற்கு சிறப்பு விமானங்கள் அல்லது கப்பல்கள் மூலம் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு வைகோ அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.



உறக்கம் உன் விழிகளை
தழுவத் துடிக்கலாம் !
வெற்றிக்குப் பின் வருக
என்று அதற்கு
விடை கொடுத்து
அனுப்பி விடு.

.....கலைஞர்...

## தமிழ்நாடு தலை குனியாது!

# ஓ.பன்னீர்செல்வம் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



### மாவட்டக் கழகச் செயலாளர் அறிவிப்பு!

| தேதி | நேரம் | தொகுதி | ஒன்றிய/ நகர/ பேரூர் | இடம் |
|---|---|---|---|---|
| மார்ச். 22 | காலை 9.00 மணி | மானாமதுரை (தனி) | இளையான்குடி ஒன்றியம் | எம்.ஜி.எஸ். மஹால், புதுக்குடி, இளையான்குடி |
| மார்ச்.22 | மாலை 4.00 மணி | சோழவந்தான் (தனி) | மதுரை ஒன்றியம் | சோழவந்தான் |
| மார்ச். 23 | காலை 9.00 மணி | கம்பம் | உத்தமபாளையம் ஒன்றியம் கம்பம் நகரம் | கவிதா தாமோதரன் மண்டபம், சின்னமனூர் |
| மார்ச். 24 | மாலை 4.00 மணி | பெரியகுளம் (தனி) | பெரியகுளம் ஒன்றியம். தேனி நகரம், தென்கரை பேரூர் | தேனி |
| மார்ச்.24 | இரவு 7.00 மணி | போடிநாயக்கனூர் | சின்னமனூர், தேனி ஆகிய ஒன்றியங்கள், போடி நகரம், பழனி செட்டிபட்டி, பூதிப்புரம், மார்கேயன்கோட்டை ஆகிய பேரூர்கள் | போடிநாயக்கனூர் |

**சிவகங்கை மாவட்டச் செயலாளர் கே.ஆர். பெரியகருப்பன்,
மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் பி.மூர்த்தி,
தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க. தமிழ்ச்செல்வன்,
தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம்
நா.இராமகிருஷ்ணன் ஆகியோர் அறிவித்துள்ளனர்.**



திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதியில் அடங்கிய வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2), பூத் டிஜிட்டல் ஏஜென்ட்(BDA), பூத் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ.அன்பரசன் உரையாற்றினார். அருகில் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தொகுதி பார்வையாளர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.டி.கருணாநிதி, ந.கோபால், இ.மணி, நகரச் செயலாளர்கள் பட்டூர் எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, சதீஷ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமை:

# மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. நிர்வாகிகள் கலந்தாய்வு கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

சென்னை, மார்ச்.22-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. நிர்வாகிகள் கலந்தாய்வு கூட்டம் போரூர் மவுண்ட் பூந்தமல்லி சாலையில் உள்ள ஏ.ஜி.டி. பார்க் ஹோட்டலில் இன்று 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., தலைமையில், பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், எம்.சி., ஒன்றிய கழக செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன், கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் தொகுதி மேற்பார்வையாளர் பி.டி.பாண்டிசெல்வம் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொள்கிறார்கள்.

எனவே இக்கூட்டத்தில் பகுதி, ஒன்றிய கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள். வழக்கறிஞர் அணியினர் மற்றும் ஊராட்சி அளவிலான முக்கிய நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.






கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கழக வழக்கறிஞர்கள் மற்றும் அ.தி.மு.க.வில் இருந்து விலகி கழக தலைவர் முன்னிலையில் இணைத்துக் கொண்ட 150 வழக்கறிஞர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் – சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் கொளத்தூர் பார்வையாளர் இரா.விடுதலை ஐ.சி.எஃப். வ.முரளிதரன் எ.நாகராஜன், கே.சந்துரு, சி.மகேஷ் குமார், திருமாறன், விஜயகுமார், ஆர்.வி.பாபு, குணசேகர், ஆர்.விஜயலட்சுமி, அதிசயா மற்றும் கொளத்தூர் சட்டமன்றத்திற்கு உட்பட்ட வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.